# ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்வான். வெளி 21 : 7

கிறிஸ்துவுக்குள் பிரியமானவரே,

உமக்கு ஜெயம் கிடைக்கப்பண்ணுகிறவரைக்கும் தேவன் காட்டும் தீபம் முறியாது. அணையாது. இன்னும் கொஞ்ச நம்பிக்கைதானே இருக்கிறது என வருந்துகிறீர்களா ? அல்லது சீஷரைப்போல இராமுழுவதும் பிரயாசப்பட்டோம் ஒன்றும் பலனில்லையே என நொந்து போயிருக்கிறீர்களா. அல்லது எல்லா நம்பிக்கையும் அற்று போயிற்று என்று மனம் பதறுகிறீர்களா.

**சங்கீதம் 41 : 11 :** உங்கள் விசுவாச அறிக்கையாக இந்த மாதம் அடிக்கடி கூறுங்கள்.
என் சத்துரு என் மேல் ஜெயம் கொள்ளாததினால், நீர் என் மேல் பிரியமாயிருக்கிறீர் என்று அறிவேன் – என்பதாக.

**பரிசுத்த பவுல் கூறுகிறார் 1 கொரி 15 : 57**

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே, நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**ஜெயங்கொள்ளுகிறவனுக்கு கிடைக்கும் 7 ஆசீர்வாதங்களை 7 சபை மூலமாக காண்போம்.**

**1. எபேசு சபையின் தூதனுக்கு எழுதப்பட்டவை – வெளி 2 : 7** ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ,

அவனுக்கு தேவனுடைய பரதீசியின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்கக் கொடுப்பேன்.

**2. சிமிர்னா சபையின் தூதனுக்கு எழுதப்பட்டவை – வெளி 2 : 11**

ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை.

**3. பெர்கமு சபையின் தூதனுக்கு எழுதப்பட்டவை – வெளி 2 : 17**

ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவை புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின் மேல் எழுதப்பட்டதும், அதை பெறுகிறவனேயன்றி, வேறொருவனும், அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தை கொடுப்பேன்.

**4. தியத்தீரா சபையின் தூதனுக்கு – வெளி 2 : 26–28**

ஜெயங்கொண்டு முடிவு பரியந்தம் என் கிரியைகளை கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றது போல, ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான். அவர்களை மண் பாண்டங்களை போல நொறுக்கப்படுவார்கள். விடி வெள்ளி நட்சத்திரங்களை அவனுக்கு கொடுப்பேன்.

**5. சர்தை சபையின் தூதனுக்கு எழுதப்பட்டவை – வெளி 3 : 5**

ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ, அவனுக்கு வெண்வஸ்திரம் தரிக்கப்படும், ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும், அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்.

**6. பிலதெல்பியா சபையின் தூதனுக்கு – வெளி 3: 12**

ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ, அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன். அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை. என் தேவனுடைய நாமத்தையும், என் தேவனால் பரலோகத்திலிருந்து இறங்கி வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன் மேல் எழுதுவேன்.

**7. லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு – வெளி 3 : 21**

ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ, அவனும் என்னுடைய சிங்காசத்தில் என்னோடே கூட உட்காரும்படி அருள் செய்வேன்.

**எவைகளிலிருந்து ஜெயம் பெறவேண்டும்.**

**வெளி 2 : 4 –** ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு.

**வெளி 3 : 11 –** இதோ சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.

எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே,

மேற்கண்ட காரியங்களிலிருந்து நீங்களும் நானும் ஜெயம் பெறவேண்டும். அப்படி ஜெயம் பெற்றால் முன்னால் உள்ள 7 ஆசீர்வாதங்கள் நம்மை தொடரும். இம்மையும் உனக்கு நியாயத்திற்கு ஜெயங்கிடைக்கும் வரையிலும், திரியை அணையாமலும் இருப்பார்.

**ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்வான்.**